# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண்கள். 76/2019 மற்றும் 187/நகராட்சி/2019**
**நாள் : 06/03/2020**

**1) திரு P. ராகேஷ்பாபு (எ) ரமேஷ்பாபு, அரக்கோணம்.**
**2) திரு M.ஆனந்தன், அரக்கோணம்.** – **முறையீட்டு மனுதாரர்கள்**

**நகராட்சி ஆணையர்,**
**அரக்கோணம் நகராட்சி,**
**அரக்கோணம்** – **எதிர் மனுதாரர்**

வேலூர் மாவட்டம், அரக்கோணம், நேருஜி நகர், 4–வது குறுக்கு, 6–வது தெரு, 23– எண்ணிட்ட சத்தியா இல்லம் என்ற முகவரியில் வசிக்கும் திரு P. ராகேஷ்பாபு என்ற ரமேஷ்பாபு அவர்களின் 25.04.2019 நாளிட்ட மனுவும் வேலூர் மாவட்டம், அரக்கோணம், சுவால்பெட், சுப்புராயன் தெரு, 16 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு M.ஆனந்தன் அவர்களின் 02.08.2019 நாளிட்ட மனுவும் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையே 76/2019 மற்றும் 187/2019 எண்களிட்ட முறையீட்டு மனுக்களாகப் பதிவு செய்யப்பட்டன. மனுதாரர்களின் முறையீடு சம்பந்தமாக நகராட்சி ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை, விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர்கள் மற்றும் நகராட்சி அலுவலர்கள் அளித்த வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

வேலூர் மாவட்டம், அரக்கோணம், நேருஜி நகர், 4–வது குறுக்கு, 6–வது தெரு, 23– எண்ணிட்ட சத்தியா இல்லம் என்ற முகவரியில் வசிக்கும் திரு P. ராகேஷ்பாபு என்ற ரமேஷ்பாபு என்பவர் தனது முறையீட்டு மனுவில், 2002–ஆம் ஆண்டு அரக்கோணம் நகராட்சி தனக்கு ஒதுக்கீடு செய்த 20 எண்ணிட்ட கடையினை நகராட்சி ஆணையர் மற்றும் அலுவலர்கள் துணையுடன் முறைகேடாக ஆக்கிரமிப்பு செய்த நபரிடமிருந்து மீட்டுத் தரக்கோரி முறையிட்டுள்ளார். எனினும் இந்நேர்வின். மற்றொரு முறையீட்டு மனுதாரரான திரு M.ஆனந்தன் என்பவரும் நகராட்சிக்குச் சொந்தமான மேற்குறிப்பிட்ட கடையினை தன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தர ஆணையிடக்கோரியும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையிட்டுள்ளார்.

2. நகராட்சி ஆணையரின் 21.05.2019 நாளிட்ட அறிக்கையில் அரக்கோணம் நகராட்சி கடை எண்.20, பொது ஏலம் மூலம் திரு R. ராகேஷ்பாபு என்பவருக்கு 2002–ஆம் ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டது என்றும் 2014–15–ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நான்கு ஆண்டுகளுக்கு மேலாக வாடகை நிலுவையினை செலுத்தாததால் 22.03.2018 அன்று நகராட்சி மூலம் காவல்துறை முன்னிலையில் கடையினை பூட்டி சீல் வைக்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், குடும்ப சூழ்நிலை காரணமாக தன்னால் குத்தகையை தொடரமுடியவில்லை எனத் தெரிவித்துள்ள கடிதத்தில் தனது பெயரை நீக்கி ஆனந்தன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்திடுமாறு முழுமனதுடன் எழுதி ஒப்புதல் அளித்துள்ள 31.03.2018 நாளிட்ட கடிதத்துடன் ரூபாய் 50/– மதிப்பிலான முத்திரைத் தாளில் ஒப்புதல் அளித்துள்ள பத்திர நகலையும் நகராட்சி ஆணையர் தனது அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரர் திரு P. ராகேஷ்பாபுவிடம் 08.07.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. 2002–ஆம் ஆண்டு தனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரக்கோணம் நகராட்சி கடை எண்.20–இல் "ஓட்டல் பாலாஜி" என்ற உணவகம் நடத்தி வந்ததாகவும் 2018–ஆம் ஆண்டு வரை எவ்வித பிரச்சினையும் இல்லை என்றும், பிறகு தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மேற்குறிப்பிட்ட கடை பூட்டப்பட்டிருந்தது என்றும், அந்நிலையில் திரு ஆனந்தன் தனது கடையை ஆக்கிரமித்துக் கொண்டதால் அவர் மீதும் திரு இரவிசந்திரன் மீதும் காவல் நிலையத்தில் 11.09.2018 அன்று புகார் செய்திருந்ததாகவும் நகராட்சி ஆணையர் திருமதி கோ. கமலகுமாரி அவர்களை ஜனவரி திங்களில் அலுவலகம் சென்று பார்த்ததாகவும், அப்பொழுது திரு ஆனந்தனிடமிருந்து பெற்றுத் தரும் ரூ. 7 லட்சத்தைப் பெற்றுக்கொண்டு, கடையை அவருக்கு கொடுத்துவிடுமாறு கூறியதாகவும் விசாரணையின் போது தெரிவித்தார். ஆக்கிரமிப்பு செய்து கடையை நடத்தி வரும் திரு ஆனந்தன் நகராட்சிக்கு எந்தக்கட்டணமும் செலுத்தாமல் வெறும் கையூட்டு மட்டுமே வழங்கி மூன்று கடைகளாக நடத்தி வருவதாகவும் தெரிவித்தார். 10.07.2018 நாளிட்ட கடிதத்தில் ஆணையாளரும், மேலாளரும் ஒரே நாளில் கையொப்பம் இட்டுள்ளதையும் குறிப்பிட்டு கடித நகல்களை சமர்ப்பித்தார்.

4. அரக்கோணம் நகராட்சி ஆணையர் 08.07.2019 மற்றும் 15.07.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி நகராட்சிப் பதிவேடுகளின்படி முறையீட்டு மனுதாரரான திரு ராகேஷ்பாபு பெயரில் கடை உள்ளதென்றும், 2015–ஆம் ஆண்டு முதல் திரு ஆனந்தன் என்பவர் கடையை நடத்தி வருவதாகவும் திரு ஆனந்தன் மீது காவல் துறையினரிடம் எந்தப்புகார் மனுவும் கொடுக்கவில்லையென்றும், தான் இந்நகராட்சிக்கு வந்து நான்கு மாதங்களே ஆகியுள்ள நிலையில் தன்னால் எந்தவித நடவடிக்கையும் எடுக்க இயலவில்லையென்றும் மேலும், ஆக்கிரமிப்பாளரை காலி செய்து உரியவரிடம் கடையை ஒப்படைத்து அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார். திரு எம். ஆனந்தன் என்பவரை அலுவலகத்திற்கு அழைத்து விசாரணை செய்ததில் தான்தான் கடை நடத்தி வருவதாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார் என்று தெரிவித்து அவ்வாக்குமூல நகலை 12.07.2019 நாளிட்ட கடிதத்துடன் இணைத்து அனுப்பியுள்ளார். மேலும், முறையீட்டு மனுதாரர் திரு P. ராகேஷ்பாபுவிடம் 11.07.2019 அன்று விசாரணை மேற்கொண்ட வாக்குமூல நகல்களையும் அனுப்பியுள்ளார்.

5. இந்நேர்வில், அரக்கோணம் நகராட்சி கடை எண்.20, திரு P. ராகேஷ்பாபு என்ற ரமேஷ் பாபு என்பவருக்கு 2002–ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட கடைக்கு, 024/206720 எண்ணிட்ட வரி விதிப்பும் செய்யப்பட்டுள்ளது. இந்நேர்வில், தொடர்ந்து

4 ஆண்டுகளுக்கு வாடகை நிலுவையினை செலுத்தாததால் 28.03.2018 அன்று காவல்துறை முன்னிலையில் / நகராட்சியால் கடையினை பூட்டி முத்திரையிடப்பட்டுள்ளது. ஆனால், கடையின் பூட்டு உடைக்கப்பட்டு அக்கடையில் இருந்த பொருட்கள் அனைத்தும் வருவாய் ஆய்வாளர் மற்றும் நகராட்சி அலுவலர்கள் உதவியுடன் திரு ஆனந்தன் மற்றும் இரவிச்சந்திரன் எடுத்துச் சென்றது குறித்து 18.06.2018 நாளிட்ட கடிதத்தில் திரு ரமேஷ்பாபுவின் மனைவி திருமதி லதா என்பவர் மாவட்ட ஆட்சியரிடம் மனுச் செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட திருமதி லதாவின் மனுவிற்கு நகராட்சி ஆணையரின் 10.07.2018 நாளிட்ட கடிதம் எண்.63/2018/அ2–இல் பதில் அளிக்கப்பட்டுள்ளது. எனினும், அக்கடிதம் 10.07.2018 அன்று ஆணையாளர் திருமதி கமலகுமாரி என்பவராலும் மற்றும் மற்றொரு அலுவலரால் ஆணையாளர் இடத்தில் கையொப்பம் இட்டும் இரண்டு கடிதங்களும் திருமதி லதா என்பவருக்கு அனுப்பப்பட்டுள்ளன. காவல்துறை முன்னிலையில் நகராட்சியால் முத்திரையிட்ட கடையின் பூட்டு உடைக்கப்பட்டது குறித்து எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல், அப்போதைய நகராட்சி ஆணையர் திருமதி கோ. கமலகுமாரி அவர்கள் தனது 16.07.2018 நாளிட்ட கடிதத்தில் மேற்குறிப்பிட்ட கடையினை ஆனந்தன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய வேலூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரிடம் உரிய அனுமதி கோரி கருத்துரு அனுப்பியுள்ளார்.

6. இந்நிலையில், குத்தகைதாரர் திரு P. ராகேஷ்பாபு என்பவரின் கடையை ஆக்கிரமிப்பு செய்துள்ள திரு ஆனந்தன் என்பவரும் இம்முறைமன்ற நடுவத்தில் 02.08.2019 நாளிட்ட முறையீட்டு மனுவினைத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவில் 03.07.2007 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.92–இன் படி அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில் ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமத்தை மாற்றித் தரலாம் எனக் கூறி 31.03.2018 அன்று திரு P. ராகேஷ்பாபுவிடம் அவர் சம்மதத்தின் பேரில் குத்தகை ஒப்படைப்பு கடிதம் மற்றும் கடையின் உரிமம் பெயர் மாற்றத்திற்கான கடிதத்தையும் அப்போதைய ஆணையர் பெற்றுக்கொண்டதாகவும் மேலும், அன்றைய நாளில் வாடகை நிலுவைத் தொகை ரூ.6,32,832/–ஐ தான் செலுத்தியதாகவும் அதற்குண்டான இரசீது தன்னிடம் ஆணையர் வழங்கியதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதற்குப் பின்னரும் கடை சம்பந்தப்பட்ட நிலுவைத் தொகை செலுத்தப்பட்ட விவரங்களையும் திரு M. ஆனந்தன் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகைகள் செலுத்தப்பட்டும் குத்தகைதாரர் திரு P. ராகேஷ்பாபு மற்றும் நகராட்சியும் கூட்டாக சேர்ந்து தனக்கு இன்றைய நாள் வரை குத்தகை உரிமத்தினை பெயர் மாற்றம் செய்து தரவில்லை என்றும் தான் அப்போதைய நகராட்சி ஆணையர் திருமதி கோ.கமலகுமாரி, மேலாளர் திரு T.T. கோபிநாத் மற்றும் குத்தகைதாரர் திரு P. ராகேஷ்பாபு ஆகிய மூவராலும் தான் ஏமாற்றப்பட்டுள்ளதாகத் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

7. முறையீட்டு மனுதாரர் திரு எம். ஆனந்தன் அவர்களிடம் 27.11.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. அரக்கோணம் புதிய பேருந்து நிலையத்தில் நகராட்சிக்குச் சொந்தமான கடை எண். 20 – ஐ திரு. ரமேஷ்பாபு என்பவர் குத்தகைக்கு எடுத்திருந்தார் என்றும் அக்கடையினை தான் உள்வாடகை ஒப்பந்த அடிப்படையில் எடுத்து நடத்தி வந்ததாகவும் விசாணையின்போது தெரிவித்தார். மேலும், குத்தகைதாரர் திரு. ரமேஷ் பாபு கடையை மூன்றாகப் பிரித்து வாடகைக்கு விட்டிருந்தார் எனறும், நகராட்சி ஆணையர் திருமதி. கமலகுமாரி ஒரு முறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடைப்படையில் தனக்கு குத்தகை உரிமம் மாற்றித் தரலாம் எனத் தெரிவித்தார். எனவே, 31.3.2018 அன்று திரு. ரமேஷ்பாபுவின் சம்மதத்தின் பேரில் சரண்டர் கடிதம் மற்றுழ் கடையின் உரிமத்திற்கான பெயர் மாற்றக் கடிதத்தினை நகராட்சி ஆணையாளரிடம் வழங்கப்பட்டது என்றும் விசாணையின்போது தெரிவித்தார். மேலும், நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத்

தொகையினை செலுத்திய விவரங்களை விசாரணையின்போது தெரிவித்தார். எனினும், மேற்குறிப்பிட்ட கடையின் உரிமத்தை தன் பெயருக்கு மாற்றம் செய்துதர திரு. ரமேஷ்பாபுவும் நகராட்சியும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும். மாறாக கடையை 24 மணிநேரத்தில் காலி செய்ய வேண்டுமென நகராட்சி அறிவிப்பு வழங்கியுள்ளது என்றும் விசாரணையின்போது குறிப்பிட்டார்.

8. திரு M. ஆனந்தன் அவர்களின் குற்றமுறையீடு குறித்து நகராட்சியின் முன்னாள் ஆணையர் திருமதி கோ. கமலகுமாரி மற்றும் மேலாளர் திரு T.T.கோபிநாத் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டன. குத்தகை உரிமத்தை பெயர் மாற்றம் செய்துத் தரக்கோரிய திரு M. ஆனந்தன் மற்றும் குத்தகைதாரர் திரு P. ராகேஷ்பாபு ஆகிய இருவரையும் மேலாளர் திரு T.T. கோபிநாத் மற்றும் வருவாய் ஆய்வாளர் திரு கு. அசோகன் ஆகிய இருவரும் தன்னிடம் அழைத்து வந்தனர் என்றும், நிலுவைத் தொகையினை திரு M.ஆனந்தன் என்பவர்தான் செலுத்தியுள்ளார் என்று தெரிவித்து அவர் பெயருக்கே கடை உரிமத்தை மாற்றித்தரலாம் என்றும் உரிமம் மாற்றம் செய்து தருவதற்கும் அவர்களிருவரும் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளனர் என்று தன்னிடம் தெரிவித்தாகவும் திருமதி கோ. கமலகுமாரி விசாரணையின் போது தெரிவித்தார்.

9. மேலாளர் திரு T.T. கோபிநாத் அவர்களிடம் 02.12.2019 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. திரு M. ஆனந்தன் என்பவர் நகராட்சி அலுவலகத்திற்கு வருவார் என்றும் ஆனால் தன்னிடம் பேசமாட்டார் ஆணையாளரிடம் மட்டும்தான் பேசுவார் என்றும் திரு M. ஆனந்தன் அவர்களின் வாக்குமூலம் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானது என்றும் கடையின் வாடகைத் தொகையினை திரு M. ஆனந்தன் செலுத்தியுள்ளதையும் அக்கடையினை குத்தகைதார்ர் அவருக்கு கொடுத்து விடுவதாக தெரிவித்ததும் தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்ததுடன் வேண்டுமென்றே தன் பெயரை குறிப்பிட்டுள்ளார் என்றும் மேலாளர் திரு T.T.கோபிநாத் தெரிவித்தார். எனினும். வருவாய் ஆய்வாளர் திரு கு. அசோகன் என்பவர், 31.03.2018 அன்று திரு M. ஆனந்தன், மேலாளர் திரு T.T.கோபிநாத் என்பவரை அலுவலகத்தில் பார்த்தார் என்றும் பின்னர் திரு M. ஆனந்தனையும், குத்தகைதாரர் திரு P. ராகேஷ்பாபுவையும் தனித்தனியாக ஆணையாளர் அறைக்கு மேலாளர் அழைத்துச் சென்றார் என்றும் விசாரணையின் போது தெரிவித்தார்.

10. இந்நேர்வில் நகராட்சிக்கு சொந்தமான கடையின் ஆக்கிரமிப்பினை அகற்றவோ அல்லது அக்கடையினை மீட்டெடுத்து உரிய குத்தகைதாரரிடம் ஒப்படைக்கவோ எந்தவித நடவடிக்கையும் நகராட்சி அலுவலர்கள் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. குத்தகைக்கு விடப்பட்ட கடை, குத்தகைதாரரிடம் அல்லாமல் ஆக்கிரமிப்புதாரரிடம் உள்ளதாகவே அறியமுடிகிறது. மேற்குறிப்பிட்ட கடை ஆக்கிரமிப்பினை அகற்ற நகராட்சி அலுவலர்கள் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில் அவ்வாக்கிரமிப்புக்கு நகராட்சி அலுவலர்கள் உடந்தையாக இருந்துள்ளனர் எனவும் அறிய முடிகிறது. இந்நேர்வில், ஏலம் எடுத்த இடத்தில் ஒப்பந்ததாரரை செயல்பட அனுமதிக்காமல் நகராட்சி சட்ட விதிகளுக்குக் முரணாக கடமை தவறி வேறு ஒரு தனி நபரை செயல்பட அனுமதித்து அவர் பெயருக்கு விதிகளை மீறி உரிமத்தை மாற்றித் தருவதற்கு முயன்ற நகராட்சி அலுவலர்கள் அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளது வெளிப்படையாகவே அறிய முடிகிறது. எனவே, சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையாளர்கள் மற்றும் மேலாளர் திரு T.T.கோபிநாத் ஆகியோர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பரிந்துரைத்து ஆணையிடப்படுகிறது. மேலும், ஆக்கிரமிப்பு

செய்யப்பட்ட மேற்குறிப்பிட்ட கடையின் ஆக்கிரமிப்பினை உடன் அகற்றுவதற்கும், உரிய சட்டப்படியான நடவடிக்கையினை மேற்கொள்ள நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2020**–ஆம் ஆண்டு, மார்சு திங்கள் **6**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

16.3.2020

16/3/2020

பெறுநர்

1. **திரு P. ராகேஷ்பாபு (எ) ரமேஷ்பாபு,**
   **23, சத்தியா இல்லம், 5–வது தெரு,**
   **4–வது குறுக்கு சாலை,**
   **நேருஜி நகர், அரக்கோணம் – 631 001.**
   **வேலூர் மாவட்டம்.**

2. **திரு M. ஆனந்தன்,**
   **எண்.16, சுப்புராயன் தெரு,**
   **சுவால் பெட், அரக்கோணம்.**
   **வேலூர் மாவட்டம்.**

3. **நகராட்சி நிர்வாக ஆணையர்,**
   **சாந்தோம் நெடுஞ்சாலை,**
   **இராஜா அண்ணாமலைபுரம்,**
   **சென்னை – 600 028.**

4. **நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர்,**
   **வேலூர் மண்டலம், வேலூர்.**

5. **நகராட்சி ஆணையர்,**
   **அரக்கோணம் நகராட்சி, அரக்கோணம்,**
   **வேலூர் மாவட்டம்.**

6. **நகராட்சி நிர்வாக ஆணையர்,**
   **இராஜா அண்ணாமலைபுரம்,**
   **சென்னை – 600 028.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**